
# முறுமுறுப்பு

## மறுரூபமாக்கும் சத்தியங்கள்

### கட்டுரை - 2



# முறுமுறுப்பு

## முறுமுறுப்பதையும், குறைகூறுவதையும் நாம் எப்படி நிறுத்திக்கொள்ளலாம்?

யூதாவின் புஸ்தகத்திலுள்ள 12-16-வரையிலான வசனங்களைக் கொண்டு நாம் பாடத்தைத் துவங்கலாம்:

***"இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது. ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும்; தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள்."***

அப்போஸ்தலராகிய யூதா, அவரது நாட்களில் பிரபலமடைந்து வந்துகொண்டிருந்த கருத்துகள் (அதாவது கிறிஸ்துவின் அஸ்திபாரத்தினை மறுக்கின்ற gnostic heresy/சமரச மறையியல் ஞானக்கோட்பாட்டின் கருத்துகள்) குறித்து எச்சரித்துள்ளார்;

மேலும் நாம் ஒவ்வொருவரும் இத்தகைய தவறான கொள்கைகள் மீது நமக்கு இருக்கும் எந்த விருப்பங்களையும் நம்மிடமிருந்து அப்புறப்படுத்தத்தக்கதாகப் பார்த்துக்கொள்வோமாக. யூதா அவர்கள் பேசியுள்ளதான காரியங்கள் அனைத்தும் நமது ஐக்கியத்திலுள்ள சகோதரர்கள் மத்தியில் காணப்படும் என்று நாம் எண்ணிக்கொள்ள வேண்டாம். இன்றுள்ள நமது வேத மாணவர்களின் கூட்டங்களில் அத்தகைய காரியங்கள் காணப்படுகிறதில்லை. எனினும் நாம் அனைவரும் **ஜாக்கிரதையாக** இருக்க வேண்டும்.

அப்போஸ்தலராகிய பவுலும், எபேசுவிலுள்ள மூப்பர்களிடம், தான் போன பிற்பாடு "*உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்*" என்று கூறியுள்ளார் (அப்போஸ்தலர் 20:30).

மேலும் அப்போஸ்தலராகிய பேதுருவும், இஸ்ரயேலர்கள் மத்தியில் கள்ளத்தீர்க்கத்தரிசிகள் காணப்பட்டது போன்று, சிலர் கிறிஸ்தவ கொள்கைகளைப் போதிப்பவர்களாகத் தோற்றமளித்துக் கொண்டு, ஆனாலும் கிறிஸ்துவின் இனிமையான போதனைகளுக்கு எதிராக போதிப்பவர்களாகக் காணப்படுவார்கள் என்று கூறி தன் நாட்களில் காணப்பட்ட சகோதரர்களை எச்சரித்தார். இத்தகையவர்களின் செல்வாக்குகளானது, புதுச்சிருஷ்டியினுடைய வழிகளுக்கு ஊறுவிளைவிக்கிறதாய்க் காணப்பட்டு, சத்தியம் தூஷிக்கப்பட வழிநடத்திவிடுகின்றதாயிருக்கும்.

இம்மூன்று அப்போஸ்தலர்களுடைய இந்த எச்சரிப்பின் வார்த்தைகளானது, நம்மை விழித்திருந்து, ஜெபம்பண்ண ஏவுகின்றதாய் இருக்கின்றது.

## இன்னும் பரிசுத்தமாகட்டும்

"*அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.*" **வெளிப்படுத்தல் 22:11**

ஒவ்வொரு தேவபிள்ளையினுடைய இருதயத்தின் தன்மையானது வெளிப்படத்தக்கதாகத் தேவன் அனுபவங்களை அனுமதிக்கின்றார். ஒவ்வொரு அனுபவங்களிலும் கிறிஸ்தவ கொள்கைகளைப் பின்பற்றி, இப்படியாக "**இன்னும் நீதி செய்கிறவர்களாகவும் . . . . இன்னும் பரிசுத்தமுள்ளவர்களாகவும்**" காணப்படுவது நமக்கேற்றக் காரியமாகும்.

வெளிப்படுத்தல் 1:12-15-வரையிலுள்ள வசனங்களில் இடம்பெறும் காட்சியில், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் "**பாதம்**" "**பிரகாசமான வெண்கலமாக**" இருப்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலராகிய யோவான் "மனுஷகுமாரனை" (இயேசுவை) பாதம் வரையிலுமாக வஸ்திரம் அணிந்தவராகவும், பிரகாசமாய் ஜொலிக்கும் பாதங்களை உடையவராகவும் கண்டார். இது தேவ ஜனங்களுடைய குணத்தினைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது.

"வெண்கலம்" பரிபூரண அல்லது நீதிமானாக்கப்பட்ட மனுஷீக சுபாவத்தினை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இந்த வெண்கலமானது, "*உலைக்களத்தில் காய்ந்தது*" போன்று தோற்றமளிக்கின்றது (வெளிப்படுத்தல் 1:15). இது மல்கியா 4:1-ஆம் வசனத்தினுடைய தீர்க்கத்தரிசனத்தினை நினைப்பூட்டுகின்றது: "***இதோ, சூளையைப்போல எரிகிற நாள்வரும்.***" தீர்க்கத்தரிசன பார்வையில் கிறிஸ்துவின் இரண்டாம் வந்திருத்தல் (இரகசிய வந்திருத்தல், parousia; 1874 வருஷம்) முதற்கொண்டு, நாம் அந்த நாளில்தான் இருந்து வருகின்றோம். "***நியாயத்தீர்ப்புத் தேவனுடைய வீட்டிலே துவங்குங்காலமாயிருக்கிறது***" (1பேதுரு 4:17).

நமது நீதிமானாக்கப்படுதல் எனும் வெண்கலமானது, உண்மையுள்ளவர்களுக்கே உரிய வெளிச்சத்தில் மிகவும் பிரகாசிக்கத்தக்கதாகவும், தேவனுக்கான நமது நேர்மையின் விஷயத்தில் பரீட்சிக்கப்படத்தக்கதாகவும் வேண்டி, நம்மைச் சுத்திகரிக்கும் வண்ணமாய்த் தேவன் சுவிசேஷயுகத்தினுடைய இறுதிகாலங்களில் உபத்திரவத்தின் சூளைகளெனச் சோதனைகளை அனுமதிக்கின்றார்.

யூதா அடிகளார் கூறுவதுபோன்று, தங்கள் சொந்த சித்தங்களின்படி காரியங்கள் நடக்கத்தக்கதாக நாடிடும் முறுமுறுப்பவர்கள் நம் மத்தியில் காணப்படுவார்களெனில், நாம் ஆச்சரியமடைய வேண்டாம். நாமும் இத்தகைய முறுமுறுப்பவர்களில் ஒருவராக இருக்கின்றோமா என்று நம்மிடமே கேட்டுக்கொள்வோமாக!

**– நாம் ஒருவேளை முறுமுறுப்பவர்களாய் இருப்போமானால், நம்மை மாற்றும்படிக்கு தேவனிடம் கேட்போமாக –**

கொஞ்சம் புளித்தமா, முழு மாவையும் புளிக்கப்பண்ணுவது போன்று, பாவமும் நாசகரமான ஒரு வளர்ச்சியாகும். ஆகையால் முறுமுறுப்பு ஒரு பழக்கமாகிடலாம்; மேலும் இத்தகைய ஒரு பழக்கத்தினை மாற்றிடுவது சுலபமான காரியமா?

**– இதற்குக் கிருபையின் சிங்காசனத்தினிடத்தில் ஜெபமும், வேண்டுதலும் ஏறெடுக்கப்பட வேண்டும் –**

ஆனால் தேவனால் எல்லாம்கூடும் - அவர் நம்மை வனைந்து மாற்றிடுவார் (லூக்கா 1:37).

ஒருவர் மிகவும் சீர்க்கேடு அடைந்துள்ளாரெனில், சீரழிவைச் சரிசெய்ய "அதிகம் பிரயாசம்" அவசியமாகிடும்.

"**மாற விரும்புவது**" என்பது மாத்திரம் போதாது!

நாம் தொடர்ந்து, தேவனுடைய உதவிக்காக நாடிக் கொண்டும், கதவைத் தட்டிக்கொண்டும், அவரிடம் கேட்டுக் கொண்டும் இருந்து, செயலாற்றிட வேண்டும், செயல்பட வேண்டும்.

## முறுமுறுப்பு என்றால் என்ன?

முறுமுறுத்தல் என்பது, "முணுமுணுக்கும் குரலில் குறைகூறுதலாகும்; இது அடிக்கடி யாதொன்றைக் குறித்தோ அல்லது யாதொன்றிற்கு எதிராகவோ அதிருப்தியை, மனநிறைவின்மையை வெளிப்படுத்துவதும், முனங்குதலுமாகும்" (Webster's Online Dictionary).

முறுமுறுத்தல் என்பது நம் விஷயங்களில் நாம் மனநிறைவற்று இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. முதலாவதாக அது அதிருப்தியை வெளிப்படுத்துகின்றது; பின்னர் அது பெருமையையும், பேராசையையும் அநேகமாக வெளிப்படுத்துகிறதாக இருந்து, தேவனுடைய ஏற்பாடுகளுக்கு எதிராக கலகம்பண்ண வழிநடத்திவிடுகின்றதாய் இருக்கின்றது. கசப்பின் வேர்கள் நம் இருதயங்களிலும், மனங்களிலும் குடிக்கொள்ளவே, தேவன் தம்முடைய அன்பிலும், இரக்கத்திலும் அனுமதித்துள்ளதான நம்முடைய சந்தர்ப்பச் சூழ்நிலைகள் மீது நமக்கு அதிருப்தியும், ஏமாற்றங்களும் முளைத்து, அவை வளர்ந்து, நமது ஆவிக்குரிய ஜீவியத்திற்குப் பாதகமாகிவிடும்.

கர்த்தருடைய வழிநடத்துதல்களின் விஷயங்களைக் குறித்துக் குறைகூறும் குற்றம் நம்மிடத்தில் உள்ளதா?

அன்புக்குரிய நண்பர்களே, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான நமது கட்டப்படுதலுக்கும், பக்திவிருத்திக்கும் நன்மையாய் இராத எந்த ஒரு சந்தர்ப்பத்தையும், நமது பரம பிதாவினுடைய அன்புள்ள இருதயமானது நிகழ அனுமதிக்காது. சர்வ பூமியின் தேவனானவரால் காரியங்களைச் சரியாய்ச் செய்திட முடியாதா? அவரால் நிச்சயமாகச் செய்திட முடியும்!

*“நான் எதிலும் மனநிறைவு கொள்வேன்*
*ஏனெனில் தேவனின் கரமே என்னை வழிநடத்துகின்றது”*

**- கவிஞன்.**

இது விஷயத்தில் கர்த்தருடைய தரநிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், நாம் அனைவருமே கொஞ்சம் குற்றஞ்சாட்டப்படத்தக்க நிலைமையிலேயே காணப்படுவோம்.

பிலிப்பியர் 2:16-ஆம் வசனத்தில், முறுமுறுப்பைக் கர்த்தருடைய ஊழியங்களிலுள்ள காரியங்களுடனும் கூடச் சம்பந்தப்படுத்திப் பவுல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

***"எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்."***

இவ்வசனத்தில் இடம்பெறும் "செய்யுங்கள்/Do" என்ற வார்த்தையானது, சிறிய வார்த்தைகளில் ஒன்றாக இருப்பினும், மிகவும் அழுத்தமுள்ள வார்த்தைகளில் ஒன்றாகும்! கடினமான சில காரியங்களைச் "செய்துவிட்டு," மீதமானவைகள் குறித்து நாம் முறுமுறுக்கலாம் என்றில்லை; நாம் சில விஷயங்களில் திருப்திக்கொண்டும், மற்றச் சில விஷயங்களில் திருப்தியற்றும் இருக்கலாம் என்றில்லை.

"எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமல்" செய்துகொண்டிருப்பதே நம்முடைய இருதயங்கள் மற்றும் மனங்களுக்கான **பரீட்சையாகும்!**

குறைகூறுதல் என்பது, நன்றியற்று இருப்பதாகும்! நாம் குறைகூறுவோமானால், நாம் உலகப்பிரகாரமானவர்களாய் இருப்பவர்களாகுவோம்!

முறுமுறுப்பினுடைய ஒன்றன்பின் ஒன்றுள்ள தொடர்ச்சியான (டோமினோ/domino effect) விளைவானது தடுத்து நிறுத்தப்பட்டு, மாற்றம் கொண்டுவரப்படாதது வரையிலும் தொடர்ந்துகொண்டே இருக்கும். (டோமினோ விளைவு என்பது ஒன்றன்பின் ஒன்றுள்ள தொடர்ச்சியான விளைவுகள் ஆகும்). இந்தப் பெலவீனம் மாறிப்போய், உறுதியான குணம் உருவாகுகையில், அப்பொழுது பரீட்சையில் ஜெயம் கொண்டுள்ளோம் என்று அர்த்தமாகிடும் (2 கொரிந்தியர் 12:9).

முறுமுறுப்பு மற்றும் வாக்குவாதத்தினுடைய டோமினோ விளைவு நடந்தேறுவதைத் தடுத்து நிறுத்திவிடுங்கள்!

***"அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்." 1 கொரிந்தியர் 10:10***

# ஒப்புமை

ஒரு மனுஷன் பிணம் ஒன்றினை, தெருவில் எல்லோரின் கண்களுக்குத் தெரியும் விதத்தில் சுமந்து வருவதை நாம் காண்கின்றோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அதைப் பார்க்கும் மாத்திரத்திலேயே நாம் உறைந்துபோவோம்! ஏன் இப்படிச் சுமந்து வருகின்றார் என்றுகூட அநேகமாக வினவுவோம்; மேலும் யாராகிலும் ஒருவர் காவல்துறையாளனைக்கூடக் கூப்பிடலாம்! ஆனால் அந்த மனுஷனோ அவன் தினந்தோறும் அந்தப் பிணத்தைச் சுமந்துகொண்டு, அதன் அருவருப்பூட்டும் அசௌகரியங்களை அனுபவித்தாக வேண்டும் என்று கூறுகின்றான் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அந்த மனுஷனை நாம் பைத்தியம் என்றல்லவா நினைப்போம்? ஆனால் நம்மில் சிலர் இப்படி உருவகமான விதத்தில் செய்கின்றோமல்லவா?

கொலோசெயர் 3:3-ஆம் வசனத்தில் அப்போஸ்தலராகிய பவுல் "*நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது*" என்று கூறுகின்றார்.

எனினும் (நம்முடைய) பிணமானது ஒவ்வொரு நாளும் குறைகூறிக்கொண்டிருக்கின்றது, முறுமுறுத்துக் கொண்டிருக்கின்றது, அதிருப்திப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது எத்தனை விநோதமான பிணம் . . . இதனை புதைக்க நாம் ஆயத்தமான பிற்பாடு, புதைப்பதற்குப்பதிலாக நாம் அதைப் பத்திரப்படுத்து கின்றோம் மற்றும் அப்பிணமானது அதன் நிலைமையினைக்குறித்து முறுமுறுக்கும் மற்றும் குறைகூறும் தன்மை உடையதாகவும் இருக்கின்றது!

அன்புக்குரிய நண்பர்களே, ஒருவேளை பிணத்தை நாம் புதைப்போமானால் (இப்படியே நாம் நமது பூமிக்குரிய நலன்கள், விருப்பங்கள், தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் காரியங்களில் செய்ய வேண்டியவர்களாய் இருக்க வேண்டும்), நாம் பிணத்தை நம்

பார்வைக்கு மறைவாக்கிட வேண்டும், அதைக் கல்லறைக் குள்ளாக்கிட வேண்டும், அதைப் புதைத்திட வேண்டும்; மேலும் "பழைய மனுஷன்" குறைகூறிடும் ஒவ்வொரு வேளையிலும், அவனைப் புதைத்துப்போடும் விதமாகக் கூடுதல் மண்ணை அவன்மேல் அள்ளிப் போட்டுவிட வேண்டும்.

உங்களுடைய ஜீவியத்தின் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்ட ஜீவியத்தை ஜீவியுங்கள். "*மேலானவைகளையே நாடுங்கள்*" (கொலோசெயர் 3:2).

இப்படி இருப்பீர்களானால், கீழான/சாதாரண காரியங்களுக்காய் முறுமுறுத்திடுவதற்குரிய சோதனை வெகுவாய்க் குறைந்துவிடும்!

## வேதத்தில் முறுமுறுப்பிற்கான உதாரணங்கள்

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் முறுமுறுத்ததற்கான அநேகம் உதாரணங்களை நாம் பெற்றிருக்கின்றோம்.

**உதாரணம்: 1**

பழைய ஏற்பாட்டில் இடம்பெறும் "எண்ணாகமம்" புஸ்தகமானது, முணுமுணுத்தலின் நாளாகமம் என்று எளிதில் சொல்லப்படலாம். இஸ்ரயேல் ஜனங்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் மற்றும் தேவனுக்கும் எதிராய் முணுமுணுத்தார்கள்.

எண்ணாகமம் 12:1-ஆம் வசனத்தில் நாம் வாசிப்பதாவது: "*எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணியிருந்தபடியினால், மிரியாமும், ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசினார்கள்.*"

மோசே திருமணம் பண்ணினதன் நிமித்தமாய் மிரியாமும், ஆரோனும் அதிருப்திக்கொண்டிருந்தனர்; இன்னுமாகக் குடும்பத்தினரின் விருப்பங்களைக்குறித்துக் கலந்து ஆலோசிக்காமல் திருமணம் பண்ணும் அளவுக்கு மோசே மதியீனமாய்

நடந்துள்ளாரென எண்ணினார்கள்; இன்னுமாக எத்தியோப்பியா ஸ்திரீயை விவாகம் பண்ணினதில் மோசே மதியீனமாய்க் காணப்பட்டுள்ளார் என்றும் எண்ணினார்கள். எனினும் இவர்களுடைய முறுமுறுப்பிற்கான உண்மையான காரணம் . . . . . . இவர்களுடைய இருதயங்களினுடைய பெருமையும், சுயநலமான பேராசைகளுமேயாகும்.

இரண்டாம் வசனத்தில் நாம் வாசிப்பதாவது: ***"கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்."*** தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் தொடர்புடைய விஷயங்களில் நம்முடைய இருதயங்களிலும், ஜீவியங்களிலும் வெளிப்படும் ஒவ்வொரு அதிருப்தியின் மனநிலையையும் தேவன் கவனிப்பார் மற்றும் செவிகொடுத்துக் கேட்பார் என்பது நமக்கு உறுதியே; அவை நமக்கு எதிராய்க் குற்றமாய்ச் சாட்டப்படும்!

முறுமுறுப்பினுடைய பின்விளைவுகளைக் கவனியுங்கள் . . . . . மிரியாம் குஷ்டரோகியானாள். குஷ்டரோகம் என்பது பாவத்திற்கு ஒரு நிழலாகும். கர்த்தருக்கு எதிராகப் புரிந்த கலகத்திலும், அவரது திட்டங்கள் மற்றும் நோக்கங்களுக்கு எதிராக முறுமுறுத்த விஷயத்திலும் மிரியாம் அநேகமாக ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு, அதாவது வழிநடத்துபவர்களுக்கு/leaders அடையாளமாய் இருக்கின்றாள். மிரியாமினுடைய ஏழு நாட்களின் தண்டனை என்பது, கர்த்தருக்கும், அவரது ஏற்பாடுகளுக்கும் விரோதமான கலகத்திற்கு நேராக வழிநடத்துபவர்களுக்குரிய நித்தியமான தண்டனைக்குரிய அடையாளமாய் இருக்கின்றது (அதாவது இரண்டாம் மரணத்திற்கான அடையாளமாகும்; வெளிப்படுத்தல் 20:6-15; யூதா 1:13). கிறிஸ்துவை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான தலைவரென அடையாளம் கண்டுகொள்ளத் தவறுகிறவர்களாகவும், தம் வாய்க்கருவிகளெனவும், ஊழியக்காரர்களெனவும் அவரால் பயன்படுத்தப்படுகிறவர்களைக் கனம்பண்ண தவறுகிறவர்களாகவும்

காணப்படுகிறவர்களுக்கு மிரியாம் அடையாளமாய்க் காணப்படுகின்றாள் (R4037:5). இந்த நிழலில் ஆரோன் மற்ற மனுஷரின் காரியங்களில் தலையிடுகிறவர்களுக்கு அடையாளமாகுகின்றார் (R3061:4). இந்த ஒரு சம்பவத்திலும், இவர் பொன்னினாலான கன்றுகுட்டி செய்த சம்பவத்திலும், பெலவீனமான குணலட்சணத்தை உடையவராய் வெளிப்படுகின்றார் (R5308:3).

மோசேயின் பிள்ளைகளானவர்கள், அவருக்குப்பின் யூதர்களால் தெரிந்தெடுக்கப்படாதபடிக்கு, அநேகமாக தேவன் இந்தத் திருமணத்தை அனுமதித்தார்; யூதர்கள் கர்த்தரையே தங்கள் தலைவராக நோக்கிப்பார்க்க வேண்டியவர்களாய் இருந்தனர் (R3061:4). மிரியாமிற்குப்பதிலாகப் புறவினத்தாளாகிய சிப்போராள் முதல் சீமாட்டியின் ஸ்தானத்தினை எடுத்துக்கொண்டு, மத விஷயங்களில் மிரியாம் பொறாமைக் கொள்வதற்கு ஏதுவானாள் (R5308:1). சிப்போராள் கிறிஸ்துவினுடைய மணவாட்டிக்கு அடையாளமாய் இருக்கின்றாள் (R1651:6). அநேகமாக மோசேயின் முதல் மனைவி மரித்துப்போயும், சிப்போராள் அவரது இரண்டாம் மனைவியாகவும் காணப்பட வேண்டும் (R5308:1).

**உதாரணம்: 2**

மத்தேயு 20:1-16; திராட்சத்தோட்டக்காரர் உவமையில், முதலாம் மணி நேரத்தில் "*பகலின் கஷ்டத்தையும், வெயிலின் உஷ்ணத்தையும் சகித்து*" வேலை பார்த்த மனுஷர்கள், கடைசி மணி நேரத்தில் வந்து வேலை பார்த்தவர்கள் பெற்றுக்கொண்ட அதே சம்பளத்தைத் தாங்களும் பெற்றுக்கொண்டதன் நிமித்தம் முறுமுறுத்தார்கள் என்று இயேசு சீஷர்களிடம் கூறினார். ஜீவியத்தின் ஏற்றத்தாழ்வுகள் குறித்து முறுமுறுத்த கர்த்தருடைய திராட்சத்தோட்டத்திலுள்ள இத்தகைய வேலையாட்கள் உண்மையில், "வீட்டெஜமானுக்கு" எதிராக முறுமுறுக்கின்றனர் என்று இயேசு தெரிவித்துள்ளார் (மத்தேயு 20:11).

கர்த்தருடைய நன்மைகளானது, பல்வேறு வழிகளில் நமக்கு சான்று பகிரப்பட்டுள்ளது - ஆகையால் எவ்விதமான நன்றியற்ற எண்ணங்களையும் நம் மனதிற்குள்ளாக நாம் அனுமதியாமல் இருப்போமாக!

**உதாரணம்: 3**

இயேசுவினுடைய ஊழியக்காலத்தின் பிந்தைய காலங்களில் அவர் மிகவும் வெளிப்படையாய்ப் பேசினார். அவர் தம்மை வானத்திலிருந்து இறங்கி வந்த மெய்யான அப்பம் என்றும், இந்த அப்பத்தினைப் புசிப்பவன் எவனும் என்றென்றும் ஜீவிப்பான் என்றும், அவனைத் தேவன் கடைசி நாளில் எழுப்புவார் என்றும் தெரிவித்தார். இதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் "***இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான்***" (யோவான் 6:42) என்று கூறி முறுமுறுத்தார்கள்.

ஓ! அவர்கள் முறுமுறுத்தார்கள்!

இன்னுமாக தமது மாம்சத்தைப் புசியாமலும், தமது இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால், அவர்களுக்குத் தம்மிடத்தில் எந்தப் பங்குமில்லை என்று இயேசு கூறினார்; அவர்களோ: "இது கடினமான உபதேசம்; யாரால் இவற்றையெல்லாம் சகித்திட முடியும்? இது மிகவும் கடினம்; புரிந்துகொள்ளவே கடினமாய் இருக்கின்றது. யாரால் இதையெல்லாம் சகித்துக் காணப்பட முடியும்? இது என்னவெல்லாம் நிந்தனைகளைக் கொண்டு வந்திடும் பாருங்கள்; இது என்னவெல்லாம் இடர்பாடுகளை நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவந்திடும் பாருங்கள்" என்றார்கள். அவர்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின் நிமித்தமான நிந்தனைகளை விரும்பவில்லை; அவமானத்தைச் சகிக்கவோ, தங்களை வெறுமையாக்கிக்கொள்ளவோ விரும்பிடவில்லை.

"*ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம்*" (எபிரெயர் 13:13) எனும் அப்போஸ்தலராகிய பவுலின் புத்திமதியை நினைவில் கொள்ளுங்கள்.

அவர்கள் இயேசுவைப் பிசாசு பிடித்தவர் என்றும், மனநிலை பாதித்தவர் என்றும் கூறினார்கள். அவரது பாதை உலகத்திற்கு நேர்மாறாய் இருந்தது; மேலும் உலகமானது அப்போஸ்தலர்களைத் தாறுமாறாகப் பேசினது; அப்போஸ்தலர்களோ: "*ஆண்டவரே, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும்?*" மற்றவர்களெல்லாம் திரும்பிப்போய் விட்டனரே, உம்மைப் பின்பற்றின எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்றார்கள் (மத்தேயு 19:27). இயேசுவோ பிரதியுத்தரமாக: "*இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ?*" என்றார் (யோவான் 6:61). இயேசுவை நெருக்கமாய்ப் பின்பற்றி வந்தவர்களும்கூட இடறலடைந்து, முறுமுறுத்தார்கள்.

அவர்களுடைய இருதயங்களை அரித்துக்கொண்டிருந்த அதே பெருமையின் மற்றும் கலகத்தின் மற்றும் அதிருப்தியின் ஆவியானது, அவர்கள் மீது வந்த சோதனையினுடைய கடுமையின் கீழ் வெளிப்பட ஆரம்பித்தது. "*உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு*" (யோவான் 6:64) என்று எழுதப்பட்டிருப்பது உண்மையே. ஒரு கட்டத்தில் இயேசு அவர்களை நோக்கி ஏக்கத்துடனும், அன்புடனும்: "*நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?*" என்றார்; அப்போஸ்தலராகிய பேதுருவோ: "*ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே*" (யோவான் 6:68) என்றார்.

உண்மைதான், பேதுரு யாரிடத்தில் போவார்? ஒருவேளை சத்தியத்தைவிட்டு நீங்கள் வெளியேறினால், நீங்கள் யாரிடத்தில்

போவீர்கள்? ஒருவேளை நீங்கள் தேவனுடைய திட்டத்தின் மீதும், அவரது திவ்விய வழிநடத்துதல்கள் மீதும் அதிருப்தியும், திருப்தியின்மையும் அடைந்து, பின்வாங்கி விடுவீர்களானால், யாரிடத்தில் போவீர்கள்? மேலும் முறுமுறுப்பிற்கான நிவாரணி என்ன?

ஜெபம் மற்றும் விண்ணப்பம் பண்ணுவதன் மூலம் கடந்துவரும் தேவ உதவியோடுகூட, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சில உதவிகரமான காரியங்களை உங்கள் கவனத்திற்கு வைக்கின்றோம்:

## எப்படி முறுமுறுப்பதை நாம் நிறுத்துவது?

**இதோ ஆறு யோசனைகள் பின்வருமாறு:**

**I குறைகூறுதல் / முறுமுறுத்தல் என்பது ஓர் அபாயகரமான பாவம் என்று உணர்ந்துகொள்ளுங்கள்.**

நம்முடைய எதிரியானவன், நம்முடைய ஜீவியங்களில் தேவன் சித்தம்கொண்டுள்ள நோக்கத்தினை நாம் நிறைவேற்றிடுவதை விரும்புவதில்லை என்பதை அறிவோம். நம்முடைய தனிப்பட்ட ஜீவியங்களில் இச்சை அல்லது கெட்டப்பழக்கங்கள் மூலம் உங்களையோ அல்லது என்னையோ எதிரியானவனால் வழிவிலகிக் போகச்செய்ய முடியவில்லையெனில், பின்னர் எதிரியானவன் தன் வலையில் சிக்கவைப்பதற்கென்று வேறுவகையான தூண்டில் இரையைத் தேடுவான். நம்மில் அநேகருக்குத் தேவனுக்கு எதிராக முணுமுணுப்பதே - அதிருப்தியை வெளிப்படுத்துவதே - முறுமுறுப்பதே அந்தத் தூண்டில் இரையாகக் காணப்படுகின்றது (1 கொரிந்தியர் 9:24; 10:13).

முறுமுறுப்பது என்பது பாவமாகும். அது பாவம் என்று சொல்லப்படுவதற்குரிய 10 காரணங்கள் பின்வருமாறு:

1. வேதாகமத்தில் தேவன் நமக்காக அக்கறைக் கொண்டிருக்கின்றதை வெளிப்படுத்திடும் நமக்கான அவருடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் காணப்படுகையில், நாம் முறுமுறுப்பது என்பது, **அவருடைய திராணியை / ஆற்றலைச் சந்தேகிக்கிறதாய்** இருக்கும் (உரோமர் 8:28; 1 கொரிந்தியர் 15:22).

2. முறுமுறுத்தல் என்பது, **தேவ சித்தத்திற்கு எதிராய்க் கலகம் புரிதலாய் இருக்கும்** (யோபு 23:2); ஆகையால் முறுமுறுத்தல் என்பது, தேவன் அவரது ஏற்ற காலங்களில் நமக்கு கொடுக்கும் ஏற்ற அனுபவங்களில் நாம் அதிருப்தி அடைவதைக் குறிக்கின்றதாய் இருக்கும் (பிரசங்கி 3:1). முறுமுறுத்துக் கொண்டிருந்த இஸ்ரயேலர்களிடம் யோசுவாவும், காலேபும்: "*கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள்*" என்று எடுத்துக்கூறினார்கள் (எண்ணாகமம் 14:9). ஆனால் இவர்களுக்குச் செவிக் கொடுப்பதற்குப் பதிலாக, இஸ்ரயேலர்களோ கலகத்தனமான தங்களது திட்டங்களுக்கு இணங்கி நடத்திடக்கூடிய புதிய தலைவர்களைத் தெரிந்தெடுக்க ஆயத்தமானார்கள்.

3. முறுமுறுத்தல் என்பது, **தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தினை இகழும்** காரியத்தின் மாற்று உருவமாகும்; அதாவது தேவனைப் பெரியவர் என்று நாம் அடையாளம் கண்டுகொண்டு காணப்படும் அதேவேளையில், நமது வழிகள் மிகவும் கீழான/அற்பமான வழிகளாக இருக்கின்ற போதிலும், காரியங்களானது நமது வழிகளின்படி நடந்தேற வேண்டும் என்று நாம் விரும்புவதன் மூலம், தேவனுடைய வழிகளைக் குறித்துக் குறைகூறுகிறவர்களாக இருப்போம் (ஏசாயா 55:8).

4. முறுமுறுத்தல் என்பது, **தேவனுடைய திராணியை/செயல்திறமையை இகழ்வதாகும்.** பத்து வேவுகாரர்களின் தகவலானது தேவ நம்பிக்கையற்ற தன்மையின் தோற்றத்தினை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (எண்ணாகமம் 13-ஆம் அதிகாரத்தினைப் பார்க்கவும்). இஸ்ரயேலர்களை இரட்சிக்கும்படிக்குத் தேவன் கடலின் நடுவே வழியினைத் திறந்தார் . . . . . அவர்களைப் போஷிக்கும் படிக்கு வானங்களைத் திறந்தார் . . . . . அவர்களுக்குத் தண்ணீர் வழங்கத்தக்கதாகக்

கன்மலைகளைப் பிளந்தார். அவர்களது வனாந்தர பிரயாணம் எங்கும், வல்லமை மிக்கச் சேனைகளைத் தேவன் தோற்கடித்தார். பூமியிலேயே மிகவும் வல்லமையுள்ள தேசமாக விளங்கின எகிப்தியர்களிடமிருந்து அவர் அவர்களை விடுவித்துள்ளார். இப்போதும் அவர்கள் கடந்துவந்துள்ள புதிய தேசத்திலும், எழும்ப வாய்ப்புள்ள அனைத்துப் பிரச்சனைகளையும் அவரால் நிச்சயமாகவே எதிர்க்கொள்ள முடியும்.

5. முறுமுறுப்பு என்பது, **சுய அனுதாபம் பாராட்டிக்கொள்ள வழிநடத்துகின்றதாய்** இருக்கின்றது. "**இஸ்ரயேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம்**" என்றார்கள். (எண்ணாகமம் 14:2)

முறுமுறுக்கிறவர்கள் பெரும்பாலும் **தங்களுக்காகத் துக்கம் அடைகிறவர்களாகக்** காணப்பட்டு, தாங்கள் எப்படி மோசமாக நடத்தப்பட்டுள்ளனர் என்பதிலும், கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதிலும், கைவிடப்பட்டுள்ளனர் என்பதிலுமே கவனம் செலுத்துகின்றனர்.

6. முறுமுறுப்பு என்பது, **தவறான விவரங்களின் காரணமாய் உருவாகுகின்றது. தவறான விவரங்களைப் பரப்பிடும்** (வீண்பேச்சு, புறங்கூறுதல், தூஷணம், பொய்ச்சாட்சி எனும்) நாவின் பாவங்களானது, முறுமுறுப்புத் தழைத்தோங்கும் சூழ்நிலைமையினை உண்டுபண்ணுகின்றது.

இப்படி முறையிடுபவர்களாய் நாம் இருக்கின்றோமா?

7. நமக்கு முன்புள்ள பரம அழைப்பிற்கான ஓட்டத்தினை ஓடிடுவதற்கு அவசியமான பெலனையும், நமது சிலுவையைச்

சுமப்பதற்கு அவசியமான **பெலனையும் இந்த முறுமுறுப்பானது வீணாக்கி காலியாக்கிவிடுகின்றது.** "**ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்**" (எபிரெயர் 12:1) என்று வசனம் காணப்படுகிறதினால், நாம் தேவையற்ற அதிகப்படியான மற்றும் ஆபத்தான பாவ மூட்டைகளைச் சுமக்காமல் இருந்தோமானால்தான், மத்தேயு 11:30-ஆம் வசனத்தில் இயேசு வாக்களித்துள்ளது போன்று, சிலுவையானது "இலகுவான" பாரத்துடன் காணப்படும்.

8. முறுமுறுப்பானது **நல் கணிப்பை/ பகுத்துணரும் இயல்பினைச் சிதைத்துவிடுகின்றது.** முறுமுறுப்பவர் **உண்மையினைத் தவறாகப் புரிந்துகொள்ளபவராகவும், தவறாக எடுத்துக்கொள்ளபவராகவும் இருப்பார்.** உதாரணத்திற்குத் தேவன் இஸ்ரயேலர்களை எகிப்திலிருந்து மகிமையான விதத்தில் விடுவித்தப் பிற்பாடு, இஸ்ரயேலர்களோ எகிப்திலிருந்தபோதுள்ள தங்கள் ஜீவியமே நன்றாய் இருந்ததெனக் கூறத்துவங்கி, "எங்களையும், எங்கள் பிள்ளைகளையும் வனாந்தரத்தில் கொன்று போடும்படிக்கே யேகோவா தேவன் எங்களை எகிப்திலிருந்து விடுவித்தார். இந்த யேகோவா தேவன் மீட்பரல்ல; இவர் பார்வோனைவிட கொடுமையானவராய் இருக்கின்றாரே" என்றனர். இங்கு உண்மையினைச் சரியாய்ப் புரிந்துகொள்ள கொஞ்சமும் முடியாத நிலைமையினை நாம் காண்கின்றோம். பிற்பாடு முறுமுறுத்தவர்களாகிய இவர்கள் மோசேயைக் கல்லெறியவும், நாய் தான் கக்கினதைத் தின்னத்திரும்புவது போன்று, மறுபடியுமாக எகிப்தின் அடிமைத்தனத்திற்குள் திரும்பவும் முயன்றார்கள்.

ஜனங்கள் முறுமுறுத்தபோது, **அவர்களது இருதயங்கள் இருளடைந்து போயின**; மேலும் அவர்களால் சரியாய்ப் பகுத்துணர முடியாமல் போயிற்று. இப்படியாக **நன்மைத் தீமையாகவும், தீமை நன்மையாகவும் . . . .** கிறிஸ்துவினுடைய கர்த்தத்துவம் நல்லதல்லவென்றும், சுயதிகாரமுள்ள நிலையே நல்லதென்றும் . . . . . உலகப்பிரகாரமான நண்பர்கள் நல்லவர்களென்றும், பெற்றோர்களும், மற்ற அதிகார முடையவர்களும் நல்லவர்கள் அல்ல என்றும் புரிந்து கொள்ளப்படுகின்றது. எலியாபின் குமாரர்கள் மோசேயிடம்: ***"இந்த வனாந்தரத்தில் எங்களைக் கொன்றுபோடும்படி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களைக் கொண்டுவந்தது அற்பகாரியமோ, எங்கள் மேல் துரைத்தனமும் பண்ணப்பார்க்கிறாயோ?"*** (எண்ணாகமம் 16:13) என்றார்கள்.

9. **முறுமுறுப்பின் ஆவியானது யோசியாமல் தவறான முடிவுகள் எடுக்கத்தக்கதாய் வழி நடத்துகின்றது.** அதாவது இஸ்ரயேலர்கள் எகிப்திற்குத் திரும்பிப்போக விரும்பினது போலாகும்.

10. **பயம் கலந்த சூழ்நிலையில் முறுமுறுப்பானது தழைத்தோங்குகின்றது.** ஜனங்கள் பயங்கொள்ள வேண்டாம் என்று இருமுறை யோசுவாவும், காலேபும் அறிவுரை வழங்கினார்கள் (எண்ணாகமம் 14:9). ஆனால் இஸ்ரயேலர்களின் **தேவையற்ற பயமானது** அவர்களது மத்தியிலுள்ள முறுமுறுப்பின் தீயினை ஊதி தீவிரமாக்கியது. அவர்களது வல்லமைக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில், அவர்கள் காணப்பட்டார்கள்; அவர்கள் **பயமுறுத்தலையும், பாதுகாப்பின்மையையும் உணர்ந்தார்கள். அவர்களது பயம் அதிகரிக்கவே, அவர்களது விசுவாசம் காணாமல் போயிற்று.**

## II தேவன் என்ன செய்து கொண்டிருக்கின்றார் என்பதை தேவன் தாமே அறிவார் என்று நம்புங்கள்.

தேவன் தாம், என்ன செய்துகொண்டிருக்கின்றார் என்பதை அறிவார்! அவர் சித்தத்தினைச் செய்யத்தக்கதாக, நாம் நமது

சித்தங்களை ஒப்புக்கொடுத்திருந்தோமானால், நமக்கான அனுபவங்களாக எவை இருக்க வேண்டும் என்று அவர் காண்கின்றாரோ, அவற்றை அவர் பொறுப்பேற்கும்படிக்கு நாம் விட்டுவிடுவோமாக.

**யோசேப்பைப் பாருங்கள்** – அவருடைய சகோதரர்களால் அவர் படுகுழிக்குள் போடப்பட்டார் - அடிமைத்தனத்திற்குள்ளாக விற்கப்பட்டார் - போத்திபாரின் மனைவியினால் அநியாயமாய்க் குற்றம் சாட்டப்பட்டார் - சிறையில் அடைக்கப்பட்டார் - இவரின் உதவிப்பெற்ற நண்பனால் மறந்துபோகப்பட்டார் - **எனினும் இவர் முறையிட்டுக் குறைகூறினதாக உள்ள எந்த ஒரு பதிவையும் வேதவாக்கியங்கள் பெற்றிருக்கிறதில்லை.**

சகோதரர்களுக்கு எதிராக யோசேப்பு நினைத்திருந்தால் கசப்புக்கொண்டிருந்திருக்கலாம் . . . . . சிறைச்சாலையின் சுவர்களில் அவர் தன் கைமுட்டுகளை ஓங்கி அடித்து, தனக்கான காரியங்கள் அநியாயமாய் நடந்துள்ளது என்று முறையிட்டிருக்கலாம் . . . . .

ஆனால் யோசேப்பு இப்படிச் செய்தாரா?

இல்லை - அவர் தன்னைத் தேவ வல்லமைக்கு ஒப்புக்கொடுத்தார். அவருக்குத் **தேவனிடத்தில் விசுவாசம் இருந்தது.**

தாம் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராய்க் காணப்பட்ட இயேசுவை, யோசேப்பின் வாயிலாக நோக்கிப்பார்க்க மறவாதிருப்போமாக . . . . . அவர் மீது பழிச்சுமத்தப்பட்டும், அவர் துன்புறுத்தப்பட்டும் . . . . . ***"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்."*** (ஏசாயா 53:7)

முறுமுறுப்பில்லாத யோசேப்பினுடைய வாழ்க்கைக்கான இரகசியம் என்ன?

இதற்கான பதிலை ஆதியாகமம் 45:5-8-வரையிலான வசனங்களில் நாம் காண்கின்றோம் . . . . . இங்கு எகிப்தின் அதிபதியாகிய யோசேப்பு, பஞ்சத்தில் வந்துள்ள தன் சகோதரர்களிடம் பேசுகின்றார்:

**"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்."**

நான்கு வசனப்பகுதிகளில் யோசேப்பு மூன்றுமுறை "தேவன் என்னை அனுப்பினார்" என்று கூறுகின்றார். சர்வவல்லமையுள்ள தேவன் மீதான அசாதாரணமான விசுவாசத்தின் விளைவாக வரும் நம்பிக்கையினைப் பற்றிப் பேசுகின்றார். தேவனே காரியங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார் என்றும், தாம் செய்வதென்ன என்பதை அவர் அறிவார் என்றுமுள்ள உண்மையினை யோசேப்புக் கிரகித்துக்கொண்டார்.

III **எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள் (1 தெசலோனிக்கேயர் 5:18).**

IV கர்த்தரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் **ஆசீர்வாதங்கள் மீது கவனம் செலுத்துவோமாக:** அவ்வாசீர்வாதங்கள் என்னவெனில்:

- நம்முடைய **பாவங்கள் மன்னிக்கப்படும் ஏற்பாடு!** ஆகையால், மரணம் எனும் சிறைச்சாலையினின்று மனுக்குலம்

அனைத்தையும் விடுவிக்கத்தக்கதாக ஈடுபலி விலைக்கிரயமெனக் கொடுக்கப்பட்டுள்ள இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்திற்காய் நன்றி.

- **தேவன் மற்றும் இயேசு நம்மோடு இருக்கின்றார்கள் என்ற வாக்குறுதிகள்** (மத்தேயு 9:2; எபிரெயர் 13:5).
- **நாம் முறுமுறுப்பதற்கு வாய்ப்புள்ள மன அழுத்தம் தரும் எந்தச் சூழ்நிலைகளும்**- நாம் அனைத்துக் காரியங்களிலும் சந்தோஷத்தோடு பொறுமையாய்ச் சகித்து முன்னேறிடும் தன்மையினை வளர்த்திடுவதற்கு வேண்டி, **நாம் கடந்துபோக வேண்டிய பரீட்சைகளாக உண்மையில் காணப்படுகின்றன** (கொலோசெயர் 1:11; உரோமர் 5:4; 12:12). இதை நாம் எவ்வளவு சீக்கிரமாய் அடைகிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாய்ப் பிதாவினுடைய சித்தத்தைச் செய்வதில் சந்தோஷம் கொள்கின்றவர்களாய் இருப்போம் (யோவான் 4:34; 15:11; 1 தெசலோனிக்கேயர் 2:19; யோவான் 6:38).

உபத்திரவத்தின் மத்தியில், தேவனுடைய உதவியினால் குணலட்சணங்களில் ஏற்படும் ஆக்கப்பூர்வமான மாற்றங்களானது, கிறிஸ்துவுக்குள்ளான புதுச்சிருஷ்டிகளை - தேவ சித்தத்திற்கு முழுமையாய் ஒப்புக்கொடுப்பதற்கு ஏதுவானவர்களாக, தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சிக்கொள்வதற்கு ஏதுவானவர்களாக மற்றும் மனமுவந்து சந்தோஷத்தோடு சுயத்தை மறுப்பதன் மூலமாயும், சுயத்தைப் பலிச்செலுத்துவதன் மூலமாயும் பரம பிதாவுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொண்டுவருவதற்கு ஏதுவானவர்களாக வளர்த்துகின்றபடியால், உங்களது உபத்திரவமான அனுபவங்களை வேறு எதற்காகவும் கைமாற்றி விற்றுப்போட எண்ணாதிருங்கள்.

**கீழே உதவிக்கரமான ஜெபம் கொடுக்கப்பட்டுள்ளது:**

"சர்வ வல்லமையுள்ள பரம பிதாவே (உதாரணத்திற்கு) என்னுடைய வாழ்க்கையிலுள்ள இந்த ஓர் அனுபவத்தின் விஷயத்தில் . . . . . என்னுடைய இந்த ஓர் உறவு முறையின் விஷயத்தில் . . . . . உம்முடைய சித்தம் நடப்பதாக. . . . ."

"பரம பிதாவே . . . . . என்ன பேச வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை . . . . . என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை . . . . . தயவுகூர்ந்து எனக்குக் காண்பித்துக் கொடுப்பீர்களா தேவனே. உம்மை நான் நம்புகின்றேன். தயவுகூர்ந்து ஏற்ற வார்த்தைகளை என் நாவுக்கு அருளுவீராக . . . . . தயவுகூர்ந்து என் பாதைகளுக்கு வழிகாட்டுவீராக . . . . . தயவுகூர்ந்து என் நாவுக்குக் காவல் வைத்திடும் . . . . . உமக்கு நான் ஏமாற்றம் தராதபடிக்குத் தயவுகூர்ந்து உதவியருளும் . . . . . தயவு கூர்ந்து குணலட்சணத்தில் உம் குமாரன் போலாக உதவியருளும் . . ."

"முறுமுறுக்காமல் இருக்கும் **ஒழுங்கினைக்** கொண்டிருங்கள் இந்த **ஒழுங்குள்ள** குணத்தினைக் கொண்டிருக்க ஜெபியுங்கள்."

## V சந்தோஷமாயிருங்கள்.

***"என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்." (யோவான் 16:33)***

**தேவன் மீதுள்ள முழு நம்பிக்கையின் விளைவான தைரியத்திலிருந்து** சந்தோஷம் கடந்து வருகின்றது. நம்பிக்கை என்பது, தேவனோடுகூடச் சஞ்சரித்து, சம்பாஷித்து வாழும் வாழ்க்கையிலிருந்து வளரும், அவர் மீதான உறுதியான விசுவாசத்தின் விளைவாக வருகின்றது (நீதிமொழிகள் 3:5; சங்கீதம் 37:4-6; உரோமர் 8:28; நீதிமொழிகள் 3:6; யோசுவா 1:9).

சந்தோஷம் என்பது பரவக்கூடியது; மேலும் நீதிமொழிகள் 17:22-ஆம் வசனத்தில், "அது ஔஷதம்" என்று கூறப்பட்டுள்ளது.

## VI நன்றியுள்ளவர்களாய் இருங்கள், மனநிறைவுடன் இருங்கள்.

ஏனெனில் நமக்குத் தேவையானதைத் தேவன் கொடுக்கின்றாரே ஒழிய, நமது மாம்சம் ஆசைப்படுபவைகளை அவர் கொடுக்கிறதில்லை; காரணம் எது நம்மில் அவர் சித்தத்தைச் செய்வதற்குரிய மகா அன்பை வளர்த்துவதற்கு உதவியாக இருக்கும் என்றும், எது நீதியுள்ளவர்களாக நம்மை இருக்கப்பண்ணுவதற்கு உதவிடும் என்றும் அவர் நன்கு அறிவார் - நீதியுள்ளவர்களாய் இருந்தால் தவிர மற்றப்படி அவரைப் பிரியப்படுத்திட முடியாது (எபிரெயர் 12:14).

***"நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே." (எபிரெயர் 13:5-6)***

நன்றியுள்ளவர்களாய் இருப்பதற்குச் சில உதவிகுறிப்புகள்:

- உங்கள் ஜெபங்களைத் தேவனுக்கான அனைத்து **நன்றிகளுடன்** ஆரம்பியுங்கள்.
- ஒவ்வொரு நாளிலும், **நன்றி செலுத்த வேண்டிய** அனைத்துக் காரியங்களைக் குறித்துச் சிந்தியுங்கள் (அல்லது எழுதிவையுங்கள்).
- மற்றவர்களிடத்திலுள்ள **உங்கள் எதிர்ப்பார்ப்பினைக் குறைத்துக்கொள்ளுங்கள்**; மாறாக உங்கள் ஜீவியத்தினுடைய அனைத்துக் காரியங்கள் மீது **துவக்கம் முதல் முடிவு வரை**

**பரமபிதாவுக்கு இருக்கும் கவனத்தின் மீது முழுமையான நம்பிக்கைக்கொண்டிருங்கள்.**

- சூழ்நிலைகளை **ஏற்றுக்கொள்ளுங்கள்.**
- புண்பட்டு **வருத்தமடையாதிருங்கள்.**
- கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய உதவியினை நாடி, சூழ்நிலைகளை **எதிர்க்கொள்ளுங்கள்.**
- உங்களால் **முடிந்ததைச் செய்யுங்கள்.**

## இறுதியாக

"நமது விசுவாசத்தைத் துவக்கினவரும், முடிப்பவருமாகிய இயேசுவின்" மீது நமது கண்களைப் பதிய வைப்போமாக (எபிரெயர் 12:2). பாடிக்கொண்டே பரம பட்டணத்திற்கு நேரான பாதை முழுவதும், அவரைப் பின்தொடர்ந்து போவோமாக. நாம் வீழ்ந்துபோகாதபடிக்கு நமது மீட்பர் நம்மோடு உள்ளார் என்று அறிந்துகொண்டவர்களாக, எல்லாவற்றிற்காகவும் நன்றி ஏறெடுப்போமாக. பரலோகத்திலும், பூமியிலும் சகல அதிகாரமுடையவர் நம்மிடம்: "உபத்திரவமுள்ள உலகத்திற்குள் கடந்து செல்லுங்கள்; நான் முடிவுபரியந்தம் எப்போதும் உங்களோடுகூட இருப்பேன்" என்று கூறுகின்றார்.

உரோமர் 8:35-39-வரையிலுள்ள வசனங்களிலுள்ள பவுலின் செய்தியிலிருந்து ஊக்கமடையுங்கள்:

***"உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.***

***மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்."***

நாம் முறுமுறுக்காமல், மாறாக தேவன் நமக்கு நியமித்துள்ளதான ஒவ்வொரு உபத்திரவத்திலும் ஒரு தெய்வீகத் திட்டம் உள்ளது என அறிந்தவர்களாக, நம்முடைய பிரச்சனைகளின் மத்தியில், அவரிடம் ஜெபம் ஏறெடுக்கவும், அவரைத் துதிக்கவும் தக்கதாக, தேவன் நமக்கு உதவுவாராக. உபத்திரவம் நம்முடைய நன்மைக்கானது என்றும், நம்மைத் தாழ்மைக்கொள்ளச் செய்யவும், நம்மைப் பரீட்சிக்கவும் வருகின்றது என்றும் அறிந்தவர்களாக நாம் களிகூருவோமாக; மேலும் இவை இறுதியில் நமக்கு நன்மையாக முடியும் என்றுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கைக்கொண்டவர்களாக, அவருக்கு முழுமையாய்க் கீழ்ப்படிவோமாக!

ஆமென்!!

*- BIBLE STUDENTS DAILY*

(தமிழாக்கம்)

## தலையில் பாய்ந்த அம்புகள்

சீசர் அவர்கள் தன் பிரபுக்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் வேண்டி, மாபெரும் விருந்து ஒன்றை ஆயத்தம்பண்ணியிருந்ததைக் குறித்து நாம் வாசித்திருக்கின்றோம். ஆனால் அந்த நியமிக்கப்பட்ட நாளிலோ, விருந்து உபச்சாரத்திற்கென்று பிரம்மாண்டமாய் ஏதும் செய்ய முடியாதளவுக்குப் பெருமழை வந்து, அந்த நாளினை மிகவும் மோசமான சூழ்நிலைக்குரியதாக்கிற்று; இதனால் அதிருப்தியும், கோபமும் அடைந்தார் சீசர். பின்பு அம்புகளைத் தங்களிடத்தில் வைத்திருக்கும் யாவரும், தங்கள் பிரதான தெய்வமாகிய ஜூப்பிட்டர், இத்தகைய மழையான வானிலையினை அனுமதித்தமைக்குத் தங்கள் சார்பிலான எதிர்ப்பினை, ஜூப்பிட்டருக்கு எதிராய்த் தெரிவிக்கத்தக்கதாக, ஜூப்பிட்டர் மீது அம்புகளை எய்துவிடும் படிக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அப்படிச் செய்தபோது, வானத்தை நோக்கி அவர்களால் செலுத்தப்பட்ட அம்புகளோ, திரும்பி அவர்கள் தலைகளுக்கு நேராகவே பாய்ந்தது. அதனால், அவர்களில் அநேகர் மோசமான காயங்களை அடைந்தனர். இதுபோலவே நம்முடைய முறுமுறுப்புகளும், தேவனை நோக்கி எய்து அனுப்பப்படும் அநேகம் அம்புகளாகக் காணப்படுகின்றபடியால், அவை நம் சொந்த தலைகளினிடத்திற்கே திரும்பிவரும்; அவை தேவனைக் காயப்படுத்துவதில்லை, மாறாக நம்மையே காயப்படுத்திவிடும் என்ற உண்மையினை புரிந்துகொள்வோமாக!

தொகுப்பாளர்: சகோ. A.C. Frey
'Cyclopedia of Religious Anecdotes'

---

## ஆமென்! ஆமென்!

சொல்ல முடியாதே எந்தனால் -
நாட்தோறும் அழுத்திக்கொண்டிருக்கும்
அனுதின தேவைகளுடைய பாரப்பளுவின் கீழ்தனில் -
"நான் இவைகளில் மகிழ்ச்சியாய் இருக்கின்றேன்" என்று - ஆம்!
மகிழ்கின்றேன் என்று எந்தனால் சொல்ல இயலாதே.
ஆனாலும் சொல்லமுடியுமே எந்தனால் -
இக்கரடுமுரடான பாதைதனில் நடப்பது
அவர் திருவுளமாயிருந்தால், "நான் நடப்பேன்" என்று - ஆம்!
அப்படியே நடப்பேன் என்று எந்தனால் சொல்ல இயலுமே!

சிந்திக்க முடியாதே எந்தனால் -
சுடர்விடும் கதிரவனை கார்மேகங்கள் மறைக்கையில் -
"எல்லாம் நன்றாகவே உள்ளது" என்று - ஆம்!
நன்று என எந்தனால் எண்ணிட இயலாதே.
ஆனாலும் எண்ணிடமுடியுமே எந்தனால் -
ஜீவனுள்ள, அன்புள்ள தேவனோ
"நன்றாகவே உள்ளது" என்று எண்ணிடில், நானும்
"உம் சித்தம் ஆகக்கடவது" என்று - ஆம்!
அதுவே ஆகக்கடவது என்று எந்தனால் எண்ண இயலுமே!

பேசமுடியாதே சந்தோஷமுள்ள தொனிகளில் எந்தனால் -
என் கன்னங்களில் வடியும் கண்ணீர்த் துளிகள்
நான் வேதனையில் துடிப்பதைக் காட்டுகையில் - ஆம்!
சந்தோஷதொனிகளில் எந்தனால் பேச இயலாதே.
ஆனாலும் பேசமுடியுமே எந்தனால் -
"மகிழ்ச்சியடைய எந்தனால் முடியும்"வரை,
சாந்தமாய்க் கீழ்ப்படிதலோடு பாடு அனுபவிக்க
அருளப்பட்ட கிருபைதனைப் பற்றியே - ஆம்!
அக்கிருபைப் பற்றியே எந்தனால் பேச இயலுமே!

புரிந்துகொள்ள முடியாதே எந்தனால் -
தேவன் அன்பானவராகவே இருக்கையில்,
அவர் ஏனோ சில காரியங்களை அனுமதிக்கின்றாரே என்று - ஆம்!
ஏன் என்று எந்தனால் புரிந்துகொள்ள இயலாதே.
ஆனாலும் காணமுடியுமே எந்தனால் -
இரகசிய மேகங்களினூடே மங்கலாய்
அவர் கரம் இருப்பதை - ஆம்!
அக்கரம் இருப்பதை எந்தனால் காண இயலுமே!

அடக்கிக்கொள்ள முடியாதே எந்தனால் -
கந்தகநீரென வடிந்திடும் எந்தன் கண்ணீர்களை - ஆம்!
கண்ணீர்களை எந்தனால் அடக்கிக்கொள்ள இயலாதே.
ஆனாலும் அடக்கிக்கொள்ள முடியுமே எந்தனால் -
"இப்படி அல்லது அப்படி இருந்திருக்கலாமே" என்றே
எந்தனுக்குள் எழும்பிடும் பெருமூச்சுகளை - ஆம்!
அப்படியான பெருமூச்சுகளை எந்தனால் அடக்க இயலுமே!
எந்தனுக்குள் எழும்பிடும் ஒவ்வொரு முறுமுறுப்புதனையும்
அடக்கி தணித்திட எந்தனால் முயற்சிக்க இயலுமே!
தேவனுடைய இன்பமிகு சித்தத்திற்கே - ஆம்! அச்சித்தத்திற்கே
"ஆமென்" என்று எந்தனால் பதில்சொல்ல இயலுமே!

**முக்கிய குறிப்புகள் :**

# மறுரூபமாக்கும் சத்தியங்கள்

[தமிழாக்க வெளியீடுகள்]

1. கிறிஸ்தவ திருமணம்

2. முறுமுறுப்பு

3. பாதங்கழுவுதல்

பிரதிகள் தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
8428737474; 9442221874